களோ எங்கள் சொந்தக்காரர்களோ அந்த மதுக்கடைகளை, நடத்த மாட்டோம்'' என்ற சவாலை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

வறட்சி என்று சொல்லுகிறபோது நான் சார்ந்திருக்கிற விருது நகர் பகுதியையும் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விருதுநகர் அந்த மாவட்டத்தின் தலைநகர். பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த ஊர். இன்றைக்கு அங்கே குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப் படுகிறார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது 64 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப் பட்டு, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் அது நிர்மலமான திட்டமாக ஆகியிருக்கிறது.

[பிற்பகல் 1-30]

இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு இன்றைக்கு கருணை கொண்டு வைகை ஆற்றிலிருந்து விருதுநகருக்கு தண்ணீர் கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தை தொடங்கி இருக்கின்றது. அதைத் தீவிரமாகச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத் திலே கேட்டுக்கொண்டு அமருகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் அன்று) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

242. சென்னையிலுள்ள தாஜ் கோரமண்டல் ஓட்டலுக்கு, தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் விதிமுறைகள் எண். 12(1-அ)-லிருந்து விலக்களிப்பது குறித்து, தொழிலாளர்-வேலைவாய்ப்புத்துறையின் 1981-ஆம் ஆண்டு சன வரித் திங்கள் 29-ஆம் தேதியிடப்பெற்ற 205-ஆம் எண். அர சாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1958-59-ஆம் ஆண்டு ஓட்டல் நிர்வாகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13 1958) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS